நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**குறுவை சாகுபடிக்குத் தேவையான உரம் கையிருப்பில் உள்ளது: வேளாண் துறை தகவல்**

First Published : 31 May 2011 09:08:13 AM IST

கடலூர், மே 30: கடலூர் மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடிக்குத் தேவையான உரங்கள் கையிருப்பில் உள்ளதாக, மாவட்ட வேளாண் துறை அறிவித்து உள்ளது.

வேளாண் இணை இயக்குநர் இளங்கோவன், இதுகுறித்து திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடிப் பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன. இம்மாவட்டத்தின் குறுவை பருவத்துக்குத் தேவையான தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அடங்கிய உரங்கள், தனியார் உர விற்பனையாளர்கள் மூலமாகவும், தொடக்க வேண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட தேவையான அளவு, கையிருப்பு வைக்கப்பட்டு உள்ளன.

தற்போது இம்மாவட்டத்தில் 3,573 டன் யூரியா உரம், 967 டன் டி.ஏ.பி. உரம், 1386 டன் பொட்டாஷ் உரம், 2763 டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு உள்ளன. ஜூன் மாதத்துக்குத் தேவையான உரங்கள், தேவை விவரம் அளிக்கப்பட்டு, வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

விவசாயிகள் தங்கள் பயிர்களுக்குத் தேவையான தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்துகளுக்கு நேரடி உரங்களான யூரியா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் உரங்ளை பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது. காம்ப்ளக்ஸ் உரங்களை பயன் படுத்துவதைவிட, நேரடி உரங்களைப் பயன்படுத்துவது, சிக்கனமானது.

மேலும் விவசாயிகள் சில குறிப்பிட்ட உரங்களை மட்டும் பயன்படுத்துவதையும், குறிப்பட்ட நிறுவனத்தின் உரங்களை மட்டும் பயன்படுத்துவதையும் தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். எந்த நிறுவனத்தின் உரமாக இருந்தாலும், சத்துக்கள் அடிப்படையில் அனைத்து உரங்களும் ஒன்றே. இயற்கை உரங்களை விவசாயிகள் பெருமளவு பயன்படுத்தி, ரசாயன உரங்களின் உபயோகத்தை குறைக்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள் என்று அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**உர விநியோக கண்காணிப்புக் குழு அமைப்பு**

First Published : 30 May 2011 02:06:52 PM IST

பெரம்பலூர், மே. 29: பெரம்பலூர், அரியலூர் மாவட்ட விவசாயிகளுக்கு தனியார் மற்றும் கூட்டுறவுத் துறை மூலம் விற்பனை செய்யப்படும் உர விநியோகத்தைக் கண்காணிக்க வேளாண் துறை மூலம் வட்டார அளவில் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் எஸ். சிவக்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

குறுவை நெல், மானாவாரிப் பயிர்கள் சாகுபடி தொடங்கவுள்ள நிலையில், உர விநியோகத்தை முறையாகச் செய்திட சென்னை வேளாண் ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.

அதன் பேரில், உர விநியோகம், தேவை, குறைபாடு, இருப்பு விவரத்தை கண்காணிக்கும் வகையில் வட்டார அளவில் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வட்டாரம், விவசாயிகள் தொடர்பு கொண்டு புகார் அளிக்க வேண்டிய தொலைபேசி எண்கள் வருமாறு:

பெரம்பலூர்- 04328- 224270, ஆலத்தூர்- 04328-296662, வேப்பூர்- 04328-266601, வேப்பந்தட்டை- 04328-264112.

அரியலூர்- 04329-228559, செந்துறை- 04329-242812, திருமானூர்- 04329-244570, ஜயங்கொண்டம்- 04331-250269, ஆண்டிமடம்- 04331-242930, தா.பழூர்- 04331-223409.

மேலும், விவசாயிகள் தங்களது புகாரை நேரடியாக அல்லது எழுத்து மூலம் தெரிவிக்க விரும்பினால் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலத்தில் அல்லது பெரம்பலூர் வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம்.

இந்த வசதியை விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு தேவைப்படும் ரசாயண உரத்தினை தங்கு தடையின்றி பெற்றுப் பயன்பெறலாம்.

குறைபாடுகள் குறித்து புகார் தெரிவிக்க: ஜூன் 1-ம் தேதி முதல் கண்காணிப்புக் குழு செயல்படவுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான உரம், உரிய நேரத்தில் கிடைக்காமல் தட்டுப்பாடு ஏற்படுவது, உர மூட்டையின்மேல் அறிவிக்கப்பட்டுள்ள விற்பனை விலையைவிட கூடுதல் தொகை வசூல் செய்வது, விலைப் பட்டியல் தராமல் துண்டு சீட்டில் எழுதி கொடுப்பது, உரம் இருப்பு விவரம் மற்றும் விற்பனை விலையினை விளம்பரப் பலகையில் எழுதி வைக்காமல் இருப்பது, உரத்தை இருப்பு வைத்துக்கொண்டு தர மறுப்பது, கூட்டுறவு கடன் சங்கத்தில் உரம் பெறுவதில் காலதாமதம் உள்ளிட்டவை தொடர்பான புகார்களை பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தில் உள்ள 04328-225773 என்ற தொலைபேசி எண்ணிலும், 9443954646 என்ற செல்போன் எண்ணிலும் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம்.

தொலைபேசி மூலம் பெறப்படும் புகார் மீது, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் அவர்.

தினமலர்

**சென்ற 2010 - 11ம் நிதியாண்டில்வெங்காய ஏற்றுமதி 31 சதவீதம் குறைந்தது**

மே 31,2011,00:53



புதுடில்லி:சென்ற 2010-11ம் நிதியாண்டில், நாட்டின் வெங்காய ஏற்றுமதி 31 சதவீதம் வீழ்ச்சியடைந்து, 1.30 கோடி டன்னாக குறைந்தது.வெங்காயம் உற்பத்தியில் மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் முன்னணியில் உள்ளன. இம்மாநிலங்களில், சென்ற ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் பருவம் தவறி பெய்த மழையால் வெங்காயம் விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதன் விளைவாக, டிசம்பர் மாத இறுதியில், ஒரு கிலோ வெங்காயம் 100 ரூபாய் வரை விற்பனையானது. இதையடுத்து, விலை உயர்வை கட்டுப்படுத்த, மத்திய அரசு வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதித்தது.

இதன் காரணமாக, சென்ற நிதியாண்டில் (2010-11) வெங்காய ஏற்றுமதி 31 சதவீதம் குறைந்து, 1.30 கோடி டன்னாக குறைந்தது. இது, இதற்கு முந்தைய 2009-10ம் நிதியாண்டில், 1.90 கோடி டன் என்ற அளவில் இருந்தது. சென்ற நிதியாண்டில், ஏப்ரல் முதல் நவம்பர் வரை உள்ள 8 மாத

காலத்தில் இலங்கை, மலேசியா மற்றும் வளைகுடா நாடுகளுக்கு, 1.16 கோடி டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டது.நடப்பு ரபி பருவத்தில், வெங்காய விளைச்சல் அதிகளவில் இருந்ததால், சென்ற பிப்ரவரி 17ம் தேதி வெங்காயம் ஏற்றுமதிக்கான தடை நீக்கப்பட்டது.

ஒரு டன் வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலை 28 ஆயிரம் ரூபாய் என மத்திய அரசு நிர்ணயித்தது. ஆனால், இது, சர்வதேச சந்தையை விட அதிகம் என்பதால், வெங்காயம் ஏற்றுமதி, கடந்தாண்டு இதே காலத்துடன் ஒப்பிடும் போது, 10 சதவீதமாக கடும் வீழ்ச்சியடைந்தது.

வெங்காய ஏற்றுமதிக்கான தடை நீக்கத்திற்கு பிறகு, அதாவது பிப்ரவரி 17ம் தேதி முதல், மார்ச் 23ம் தேதி வரை, 27 ஆயிரத்து 300 டன் அளவிற்கே இந்தியாவில் இருந்து வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டது. கடந்தாண்டு இதே காலத்தில் வெங்காயம் ஏற்றுமதி 2.81 லட்சம் டன் என்ற அளவிற்கு அதிகரித்து காணப்பட்டது.இதையடுத்து வெங்காயம் ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கில், பெங்களூர் ரோஸ் மற்றும் கிருஷ்ணாபுரம் ரகங்கள் தவிர, இதர ரக வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலை குறைக்கப்பட்டது. இதன்படி, சென்ற பிப்ரவரி மாதம் 600 டாலராக (28 ஆயிரம் ரூபாய்) இருந்த ஒரு டன் வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலை, சென்ற மார்ச் 31ம் தேதி 170 டாலராக (7,932 ரூபாய்) குறைக்கப்பட்டது.

இந்நிலையில், பாகிஸ்தான், சீனா, ஈரான் போன்ற நாடுகளின் போட்டியை சமாளிக்க, வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மேலும் குறைக்க வேண்டும் என ஏற்றுமதியாளர்கள், மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**ஈரோட்டில் மஞ்சள் விலை கடும் வீழ்ச்சி:குவிண்டாலுக்கு ரூ.1,342 சரிவு**
மே 31,2011,00:36



ஈரோடு:ஈரோடு மஞ்சள் மார்க்கெட்களில், 2,000 குவிண்டால் வரத்து குறைந்த போதிலும், மஞ்சள் விலை தொடர் சரிவை சந்தித்து, விலை வீழ்ச்சியடைந்துள்ளது.ஈரோட்டில், வேளாண்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், ஈரோடு சொசைட்டி மஞ்சள் மார்க்கெட், கோபி சொசைட்டி மஞ்சள் மார்க்கெட், ஓபன் (தனியார் வியாபாரிகள்) மார்க்கெட் என நான்கு மஞ்சள் மார்க்கெட் உள்ளது.தமிழகம் முழுவதும், 2,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் மூலம் தினமும், 6,000 குவிண்டால் மஞ்சள் ஈரோட்டுக்கு விற்பனைக்கு வருகிறது.

தரம், ரகம் வாரியாக, 120 வகைகளாக பிரித்து, டெண்டர் மூலம் மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்து விற்கின்றனர்.கடந்தாண்டு மார்க்கெட்டில் மஞ்சளுக்கு நல்ல விலை கிடைத்தது. 2010 டிசம்பரில் வரலாறு காணாத அளவு மஞ்சள் குவிண்டால், 18 ஆயிரம் ரூபாய்க்கு விற்றது. ஓரிரு வாரங்களுக்குப் பின் வரத்து அதிகரித்ததால், விலையில் சரிவை சந்தித்தது.ஒவ்வொரு வாரமும், 500 முதல், 700 ரூபாய் வரை குறைந்து, கடந்த நான்கு வாரங்களாக ஆயிரம் ரூபாய் வரை சரிந்தது.கடந்த வாரம் திங்கட்கிழமை ஈரோடு மஞ்சள் மார்க்கெட், ஈரோடு சொசைட்டி மஞ்சள் மார்க்கெட்டில் விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக, 8,082 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம், 7,399க்கும், கோபி சொசைட்டி மஞ்சள் மார்க்கெட்டில் விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம், 8,412க்கும், கிழங்கு மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம், 7,837 ரூபாய்க்கும் விற்பனையானது.

வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூட மஞ்சள் மார்க்கெட்டில், விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம் 8,210 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள் குவிண்டால் 7,367க்கும் விற்கப்பட்டது. ஓபன் மார்க்கெட்டில் விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக 8,009க்கும், கிழங்கு மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம் 7,084 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.நேற்று திங்கட்கிழமை மஞ்சள் மார்க்கெட்டில், ஈரோடு சொசைட்டி மஞ்சள் மார்க்கெட்டில், விரலி மஞ்சள் குவிண்டால், 6,011 முதல், 7,391 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள் குவிண்டால், 5,835 முதல், 6,679 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. 797 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. அதில், 734 மூட்டைகள் விற்பனை செய்யப்பட்டன.கோபி சொசைட்டி மஞ்சள் மார்க்கெட்டில், விரலி மஞ்சள் குவிண்டால், 5,737 முதல், 7,169 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள் குவிண்டால், 4,672 முதல், 6,495 ரூபாய்க்கும் விற்கப்பட்டன.

243 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு, 231 மூட்டைகள் விற்கப்பட்டன.வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூட மஞ்சள் மார்க்கெட்டில், விரலி மஞ்சள் குவிண்டால், 6,971 முதல், 7,549 ரூபாய் வரையிலும், கிழங்கு மஞ்சள் குவிண்டால், 5,889 முதல், 6,395 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. 361 மூட்டை மஞ்சள் கொண்டு வரப்பட்டு, 356 மூட்டைகள் விற்பனையானது.ஓபன் மஞ்சள் மார்க்கெட்டில், விரலி மஞ்சள் குவிண்டால், 5,950 முதல், 7,355 ரூபாய் வரையிலும், கிழங்கு மஞ்சள் குவிண்டால், 5,374 முதல், 6,385 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. 3,157 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்திருந்தது.

கடந்த வார விலையை ஒப்பிடுகையில், விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 595 முதல், 1,043 ரூபாய் வரையிலும், கிழங்கு மஞ்சள் குவிண்டாலுக்கு, 1,978 முதல், 1,342 ரூபாய் வரையில் சரிந்துள்ளது. மேலும், கடந்த வாரம் விற்பனைக்கு, 6,614 குவிண்டால் விற்பனைக்கு வந்திருந்தது.ஆனால், இந்த வாரம், 4,558 குவிண்டால் மஞ்சள் மட்டுமே விற்பனைக்கு வந்திருந்தது. வரத்து குறைந்துள்ள நிலையில், மஞ்சள் விலை கடும் சரிவை சந்தித்துள்ளதால் விவசாயிகள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

**தமிழகம், கேரளாவில்முட்டை விலை231 காசாக நிர்ணயம்**

மே 31,2011,00:35



தமிழகம், கேரளாவில்முட்டை விலை231 காசாக நிர்ணயம்

நாமக்கல்:தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 231 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர் விலையேற்றத்தால், கோழிப் பண்ணையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.நாமக்கலில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர்.இதையடுத்து, 228 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 3 காசுகள் உயர்த்தி, 231 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர் ஏற்றம் கண்டுவருவது, கோழிப்பண்ணையாளர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்:ஐதராபாத், 198 காசுகள், விஜயவாடா, தனுகு, 199, சென்னை, 233, மைசூரு, 222, பெங்களூரு, 220, மும்பை, 224, டில்லி, 220, பர்வாலா, 208, கோல்கட்டா, 238 காசுகள்.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கலில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 38 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 56 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

**தமிழகம், கேரளாவில் முட்டை விலை 231 காசாக நிர்ணயம்**

பதிவு செய்த நாள் : மே 31,2011,02:17 IST

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 231 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர் விலையேற்றத்தால், கோழிப்பண்ணையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 228 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 3 காசுகள் உயர்த்தி, 231 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர் ஏற்றம் கண்டுவருவது, கோழிப்பண்ணையாளர் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விபரம்: ஹைதராபாத், 198 காசுகள், விஜயவாடா, தனுகு, 199 காசுகள், சென்னை, 233 காசுகள், மைசூரு 222 காசுகள், பெங்களூரு, 220 காசுகள், மும்பை, 224 காசுகள், டில்லி, 220 காசுகள், பர்வாலா, 208 காசுகள், கோல்கத்தா, 238 காசுகள். இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 38 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 56 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

**ஈரோடு வனப்பகுதியில் ஐந்து வகை மான் இனம்**

பதிவு செய்த நாள் : மே 31,2011,02:05 IST

ஈரோடு: மாநிலங்களில் உள்ள வனப்பகுதிகளில், ஈரோடு வனப்பகுதியில் தான் ஐந்து வகையான அரிய மான் இனங்களை காண முடிகிறது. இந்தியக்காடுகளில் அதிகம் காணப்படும் விலங்குகளில் மான் இனமும் ஒன்று. சருகு மான், புள்ளி மான், குரைக்கும் மான், நான்கு கொம்பு மான், ஆண்டி லோஃப் மான், சாம்பார் மான் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட மான் இனங்கள்

உள்ளது. இதில் தமிழகத்தில் 80க்கும் மேற்பட்ட மான் இனங்கள் வசிக்கின்றன.
நெல்லை, மதுரை, நாகை, ஊட்டியில் குறிப்பிட்ட வகை கொண்ட மான் இனங்கள் வசிக்கின்றன. மாநிலத்திலேயே ஐந்து வகையான மான் இனங்களை கொண்ட பெருமை நமது ஈரோடு மாவட்ட வனப்பகுதியை சாரும்.
ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு டிவிசனில் பர்கூர், காங்கயம், அந்தியூர், எஃப்.எஸ்., பெருந்துறை, சென்னம்பட்டியும், சத்தியமங்கலம் டிவிசனில் பவானிசாகர், ஹாசனூர், தாளவாடி, டி.என்.பாளையம் ஆகிய பகுதிளிலும் காப்புக்காடுகள் உள்ளன. இங்குள்ள காடுகளில் சிறுத்தை, மான், காட்டு முயல்கள், மயில், மலை அணில், நரி உள்ளிட்ட பல வகையான விலங்குகளும், பறவைகளும் வசிக்கின்றன.
இவை மட்டுமின்றி ஈரோடு வனப்பகுதியில் 1,250 யானைகள், 25க்கும் மேற்பட்ட புலிகள் இருப்பதாக மாவட்ட வனத்துறையினர் தெரிவிக்கின்றனர். இந்நிலையில், 2010 புலிகளின் கணக்கெடுப்பின் போது, மற்ற இனங்களான மான், சிறுத்தை, மயில், நரி ஆகியவற்றின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்துள்ளது.
மாநிலங்களிலேயே சருகு மான், புள்ளிமான், சாம்பார் மான், குரைக்கும் மான், எலிமான், கடமான் ஆகிய மான் இனங்களை கொண்ட ஒரே வனப்பகுதியாக ஈரோடு திகழ்கிறது.
வன பாதுகாவலர் அருண், ""ஊட்டி மலைப்பகுதியில் சருகு மானும், நாகையில் ஆன்டிலோஃப் இன மானும், மற்ற வனப்பகுதியில் பிற இன மான்களும் வசிக்கின்றன. மாநிலத்திலேயே 5 வகைக்கும் மேற்பட்ட மான் இனங்களை ஒரு சேர கொண்ட மாவட்டமாக, ஈரோடு மண்டல வனப்பகுதி திகழ்வது பெருமை,'' என்றார்.

**ஈரோட்டில் மஞ்சள் விலை கடும் வீழ்ச்சி:குவிண்டாலுக்கு ரூ.1,342 சரிவு**

பதிவு செய்த நாள் : மே 31,2011,01:58 IST

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்களில், 2,000 குவிண்டால் வரத்து குறைந்து போதிலும், மஞ்சள் விலை தொடர் சரிவை சந்தித்து விலை வீழ்ச்சியடைந்துள்ளது. ஈரோட்டில், வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடம், ஈரோடு சொசைடி மஞ்சள் மார்க்கெட், கோபி சொசைட்டி மஞ்சள் மார்க்கெட், ஓபன் (தனியார் வியாபாரிகள்) மார்க்கெட் என நான்கு மஞ்சள் மார்க்கெட் உள்ளன. தமிழகம் முழுவதும், 2,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் மூலம், தினமும், 6,000 குவிண்டால் மஞ்சள் ஈரோட்டுக்கு விற்பனைக்கு வருகிறது. தரம், ரகம் வாரியாக, 120 வகைகளாக பிரித்து, டெண்டர் மூலம் மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்து விற்கின்றனர்.

கடந்தாண்டு மார்க்கெட்டில் மஞ்சளுக்கு நல்ல விலை கிடைத்தது. 2010 டிசம்பரில் வரலாறு காணாத அளவு மஞ்சள் குவிண்டால், 18 ஆயிரம் ரூபாய்க்கு விற்றது. ஓரிரு வாரங்களுக்குப்பின்

வரத்து அதிகரித்ததால், விலையில் சரிவை சந்தித்தது. ஒவ்வொரு வாரமும், 500 முதல், 700 ரூபாய் வரை குறைந்து, கடந்த நான்கு வாரங்களாக ஆயிரம் ரூபாய் வரை சரிந்தது. கடந்த வாரம் திங்கட்கிழமை ஈரோடு மஞ்சள் மார்க்கெட், ஈரோடு சொசைட்டி மஞ்சள் மார்க்கெட்டில் விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக, 8,082 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள் குவிண்டால் அதிகபட்ம், 7,399க்கும், கோபி சொசைட்டி மஞ்சள் மார்க்கெட்டில் விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம், 8,412க்கும், கிழங்கு மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம், 7,837 ரூபாய்க்கும் விற்பனையானது.

வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூட மஞ்சள் மார்க்கெட்டில், விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம் 8,210 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள் குவிண்டால் 7,367க்கும் விற்கப்பட்டது. ஓபன் மார்க்கெட்டில் விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக 8,009க்கும், கிழங்கு மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம் 7,084 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. நேற்று திங்கட்கிழமை மஞ்சள் மார்க்கெட்டில், ஈரோடு சொசைட்டி மஞ்சள் மார்க்கெட்டில், விரலி மஞ்சள் குவிண்டால், 6,011 முதல், 7,391 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள் குவிண்டால், 5,835 முதல், 6,679 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. 797 மூடை மஞ்சள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது.

அதில், 734 மூடைகள் விற்பனை செய்யப்பட்டது. கோபி சொசைட்டி மஞ்சள் மார்க்கெட்டில், விரலி மஞ்சள் குவிண்டால், 5,737 முதல், 7,169 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள் குவிண்டால், 4,672 முதல், 6,495 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. 243 மூடை மஞ்சள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு, 231 மூடைகள் விற்கப்பட்டது. வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூட மஞ்சள் மார்க்கெட்டில், விரலி மஞ்சள் குவிண்டால், 6,971 முதல், 7,549 ரூபாய் வரையிலும், கிழங்கு மஞ்சள் குவிண்டால், 5,889 முதல், 6,395 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. 361 மூடை மஞ்சள் கொண்டு வரப்பட்டு, 356 மூடைகள் விற்பனையானது. ஓபன் மஞ்சள் மார்க்கெட்டில், விரலி மஞ்சள் குவிண்டால், 5,950 முதல், 7,355 ரூபாய் வரையிலும், கிழங்கு மஞ்சள் குவிண்டால், 5,374 முதல், 6,385 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.

3,157 மூடை மஞ்சள் விற்பனைக்கு வந்திருந்தது. கடந்த வார விலையை ஒப்பிடுகையில், விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 595 முதல், 1,043 ரூபாய் வரையிலும், கிழங்கு மஞ்சள் குவிண்டாலுக்கு, 1,978 முதல், 1,342 ரூபாய் வரையில் சரிந்துள்ளது. மேலும், கடந்த வாரம் விற்பனைக்கு, 6,614 குவிண்டால் விற்பனைக்கு வந்திருந்தது. ஆனால், இந்த வாரம், 4,558 குவிண்டால் மஞ்சள் மட்டுமே விற்பனைக்கு வந்திருந்தது. வரத்து குறைந்துள்ள நிலையில், மஞ்சள் விலை கடும் சரிவை சந்தித்துள்ளதால் விவசாயிகள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

**தேயிலை ஏலத்தில் விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மே 30,2011,23:04 IST

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 21க்கான ஏலம் நடந்தது. இதில், 15.32 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு இருந்தது; இலை ரகம் 11.08 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 4.24 லட்சம் கிலோ அடங்கும். ஏற்றுமதி வர்த்தகத்தில், வழக்கமாக பங்கெடுக்கும் பாகிஸ்தான், ரஷ்யா, அமெரிக்கா, மேற்காசிய நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு இந்த வாரம் ஓரளவு இருந்தது. குறிப்பாக, பாகிஸ்தான், ரஷ்ய நாட்டு வர்த்கர்களின் பங்களிப்பு இருந்துது. கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப், ராஜஸ்தான் உட்பட வட மாநில வர்த்தகர்களின் பங்களிப்பும் வழக்கம் போல் குறைவாக இருந்தது. அனைத்து ரக தூளின் விலையும் கிலோ 3 ரூபாய் சரிந்தது; விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 28 சதவீதம் தேங்கியது.

சி.டி.சி., ரக விற்பனையில் அதிகபட்சம் "ஹோம்டேல்' தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு கிலோவுக்கு 146 ரூபாய் விலை கிடைத்தது; 60க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன; ஆர்தோடக்ஸ் ரகத்தில் அதிகபட்சம் சாம்ராஜ் தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு கிலோவுக்கு 188 ரூபாய் விலை கிடைத்தது; 30க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. இலை ரக விற்பனையில் சாதாரண ரக தூளுக்கு 40 - 43, சிறந்த ரக தூளுக்கு 80 - 130 ரூபாய், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரக தூளுக்கு 41-45, சிறந்த ரக தூளுக்கு 85 - 125 ரூபாய் விலை கிடைத்தது. விற்பனை எண் 22க்கான ஏலம் வரும் 2,3 தேதிகளில் நடக்கிறது.

மொத்தம் 16 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்குள்ளது. இலை ரகம் 11.66 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 4.34 லட்சம் கிலோ அடங்கும். இது கடந்த ஏலத்தை விட 68 ஆயிரம் கிலோ அதிகம்.

**விவசாயிகளுக்கு கரும்பு அறுவடை இயந்திரம் செயல் விளக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : மே 30,2011,22:02 IST

திட்டக்குடி : கோழியூரில் விவசாயிகளுக்கு கரும்பு அறுவடை இயந்திரம் செயல் விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது. பெண்ணாடம் அம்பிகா சர்க்கரை ஆலை, ஸ்ரீஜி நிறுவனம் இணைந்து, தாய்லாந்தில் இருந்து ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான புதிய கரும்பு வெட்டும் இயந்திரம் வரவழைக்கப்பட்டது. இயந்திரம் அறிமுக நிகழ்ச்சி மற்றும் கரும்பு வெட்டும் செயல் விளக்க

பயிற்சி திட்டக்குடி அடுத்த கோழியூரில் நடந்தது. நிகழ்ச்சிக்கு ஆலை முதுநிலை மேலாளர் துரைசாமி தலைமை தாங்கி, பயிற்சி முகாமை துவக்கி வைத்தார்.

வெலிங்கடன் பாசன விவசாய சங்கத் தலைவர் வேணுகோபால், ஆலை பொது மேலாளர்கள் கோட்டூர் ஸ்ரீபன் அருள், சித்தூர் முருகன், துணைப் பொது மேலாளர் கார்முகிலன், வெங்கடேஷ்பிரபு முன்னிலை வகித்தனர். கரும்பு பிரிவு முதுநிலை மேலாளர் கார்த்திக்ராஜா வரவேற்றார். கரும்பு பிரிவு துணைப் பொது மேலாளர் கார்முகிலன் கரும்பு இயந்திரத்தை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்து வைத்து பேசினார். நிகழ்ச்சியில் ஸ்ரீஜி நிறுவன மேலாளர் சூரத்சிங் மற்றும் பொறியாளர்கள் கரும்பு அறுவடை இயந்திரத்தை இயக்கி செயல்முறை விளக்கமளித்தனர்.

துணை மேலாளர்கள் அன்பு, சிவநேசன், பன்னாரி சர்க்கரை ஆலை கரும்பு ஆலோசகர் ராஜாராம், தரணி ஆலை பொது மேலாளர் குப்புசாமி, பெரம்பலூர் கூட்டுறவு ஆலை கரும்பு அதிகாரி ரகுமான், கரும்பு ஆய்வாளர் வைத்தியநாதன் உட்பட பலர் பங்கேற்றனர். இதில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## விற்பனைக்கு குவிந்துள்ள பலாப்பழங்கள்



திருவள்ளூர் நகரில் பண்ருட்டி பலாப்பழங்கள் விற்பனைக்காக குவித்து வைக்கப் பட்டிருப்பதை படத்தில் காணலாம்.

தினத் தந்தி

## கடந்த நிதி ஆண்டில் வெங்காயம் ஏற்றுமதி 31 சதவீதம் குறைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் வெங்காயம் ஏற்றுமதி 31 சதவீதம் சரிவடைந்து 1.29 கோடி டன்னாக குறைந்துள்ளது. இது, முந்தைய நிதி ஆண்டில் 1.87 கோடி டன்னாக இருந்தது. வெங்காயம் விளையும் முக்கிய பகுதிகளான மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் பருவம் தவறி பெய்த மழையால் உற்பத்தி குறைந்ததே இதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

டிசம்பர், ஜனவரி மாதங்களில் வெங்காயம் விலை விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்தது. நாட்டின் சில பகுதிகளில் ஒரு கிலோ விலை ரூ.100–ஐயும் எட்டியது. உள்நாட்டு தேவையை கருத்தில் கொண்டு வெங்காயம் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது. இதுவும் ஒரு காரணமாகும். வெங்காயம் ஏற்றுமதி மீதான தடை பிப்ரவரி 17–ந் தேதி நீக்கப்பட்டது.

தினகரன்

## குவின்டால் ரூ.6,000 ஆனது மஞ்சள் விலை பாதியாக சரிவு

பதிவு செய்த நாள் 5/31/2011 1:34:35 AM



ஈரோடு : மஞ்சள் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து பாதியாக சரிந்ததால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். ஈரோடு மஞ்சள் மார்க்கெட் வாரந்தோறும் திங்கள் முதல் வெள்ளி வரை நடக்கிறது. கடந்த வெள்ளியன்று நடந்த மஞ்சள் ஏலத்தில் மஞ்சள் விலை பெரிதும் சரிவடைந்தது. இந்த ஆண்டு தொடக்கத்தில் குவிண்டால் மஞ்சள் ஸி15 ஆயிரமாக இருந்தது. சீசன் துவங்கி தொடர்ந்து வரத்து அதிகமானதால் மஞ்சள் விலை தொடர்ந்து சரிவடைந்து வந்தது.

கடந்த வெள்ளியன்று கடைசியாக நடந்த மஞ்சள் ஏலத்தில் மஞ்சள் விலை பாதியாக சரிவடைந்தது. ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம் ரூ.7035, குறைந்தபட்சம் ரூ.6349, கிழங்கு மஞ்சள் அதிகபட்சம் ரூ.6699ம், குறைந்தபட்சம் ரூ.5916 ஆக இருந்தது. வெளிமார்க்கெட்டில் அதிகபட்சம் விரலி ரகம் ரூ.7531, குறைந்தபட்சம் ரூ.6029, கிழங்கு மஞ்சள் அதிகபட்சம் ரூ.6291, குறைந்தபட்சம் ரூ.5829 ஆக விற்றது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் குவிண்டாலுக்கு ரூ.2 ஆயிரம் முதல் 2500 வரை விலை சரிவடைந்துள்ளது. ஆண்டின் துவக்கத்தில் ஒரு குவிண்டால் ரூ.15 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட மஞ்சள் விலை தற்போது பாதியாக குறைந்திருப்பது விவசாயிகளிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# 2 மாதத்தில் பெரும் சரிவு விலை குறைந்தது மல்லிகை

பதிவு செய்த நாள் 5/31/2011 1:27:00 AM



தர்மபுரி: கடந்த 2 மாதங்களுக்கு முன் ஒரு கிலோ ஸி1,000ஐ தொட்ட மல்லிகை பூ விலை, தர்மபுரியில் நேற்று ஸி150 ஆக சரிந்தது. தர்மபுரி மாவட்டத்தில் 1,400 ஏக்கரில் மல்லிகை பூக்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் குண்டுமல்லி, ஜாதி மல்லி, காக்டே என்று மூன்று ரகம் உள்ளது. தொப்பூர், நல்லம்பள்ளி, தர்மபுரி, காரிமங்கலம், பென்னாகரம், மொரப்பூர், அரூர், பாலக்கோடு போன்ற இடங்களில் மல்லிகை பூ அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

தர்மபுரி மாவட்டத்தில் விளைவிக்கப்படும் குண்டு மல்லி, பெங்களூர், சென்னை, கோவை உள்ளிட்ட நகரங்களுக்கு செல்கிறது. கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் மல்லிகை, தர்மபுரி சந்தையில் மொத்தமாக விற்பனை செய்யப்படுகிறது. தற்போது மல்லிகை சீசன் என்பதால், தினமும் சந்தைக்கு 1 டன் விற்பனைக்கு வருகிறது. வரத்து அதிகரித்துள்ளதால், விலையும் தொடர்ந்து சரிந்து வருகிறது. இதனால் ஏராளமான வெளிமாவட்ட வியாபாரிகள் தர்மபுரியில் குவிந்து பூக்களை வாங்கி செல்கின்றனர்.